வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 09.04.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- சட்டமன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு, காலத்தின் தேவையென, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- புதுச்சேரி, கேரளம் மற்றும் அசாம் சட்டமன்றத் தொகுதிகளுக்கான, வாக்குப்பதிவு, இன்று ஒரே கட்டமாக நடைபெற்றது.
- புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில், மாலை 5 மணி நிலவரப்படி 86.92 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளது.

***பிரதமர் (17)***

இந்திய ஜனநாயகத்தை மேலும் துடிப்பானதாகவும், பங்கேற்பு மிக்கதாகவும் மாற்றுவதற்கு சட்டமன்றங்களில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு, காலத்தின் தேவையென, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இந்த இடஒதுக்கீட்டை கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டால், அது மிகவும் துரதிஷ்ட வசமானது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை முன்னெடுத்துச் செல்லும் முக்கியமான மசோதா குறித்து, விவாதித்து நிறைவேற்ற இம்மாதம் 16ஆம் தேதி நாடாளுமன்றம் கூடவுள்ளது என்று, தெரிவித்துள்ளார். இது குறித்த வீடியோவை, சமூக ஊடகத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் திரு. மோடி, 2029 மக்களவைத் தேர்தலிலும், வரும் காலங்களில் பல்வேறு மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல்களிலும், மகளிருக்கான இட ஒதுக்கீட்டுடன் நடத்த வேண்டும் என, அவர் வலியுறுத்தி உள்ளார்.

2023 செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில், ஒருமித்த கருத்துடன் நாரிசக்தி வந்தன் அதினியத்தை நிறைவேற்றியதை நினைவு கூர்ந்த பிரதமர், நம் நாட்டின் மக்கள் தொகையில், ஏறத்தாழ 50 சதவிகிதம் பெண்களே என்றும், நாட்டின் வளர்ச்சிக்கு அவர்களின் பங்கு விலைமதிப்பற்றதாக உள்ளது என அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

*தமிழ்நாடு வேட்புமனு (13)*

தமிழ்நாட்டில், வரும் 23ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, மார்ச் 30ஆம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கிய நிலையில், வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்வதற்கான கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், இதுவரை 142 மனுக்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படும். இதனிடையே, அம்மாநிலத்தில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

சென்னை சேப்பாக்கத்தில், அஇஅதிமுக பொதுச் செயலர் திரு. எடப்பாடி பழனிச்சாமி, நாமக்கல்லில் திமுக சார்பில் அக்கட்சியின் துணைப் பொதுச்செயலர் திருமதி. கனிமொழி, திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், திருநெல்வேலியில் பிஜேபிக்கு ஆதரவாக மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

*ஜெய்சங்கர் (7)*

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மொரீஷியஸ் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு, 2 நாள் பயணமாக இன்று செல்கிறார். முதல் கட்டமாக, மொரீஷியசில் 9ஆவது இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்கும் அவர், இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார். தொடர்ந்து நாளை மறுநாள், ஐக்கிய அரபு அமீரகத்தில்

பல்வேறு தலைவர்களை சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்த ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

*தேர்தல் (18)*

புதுச்சேரி, கேரளம், அசாம் மாநிலங்களின் சட்டப் பேரவைகளுக்கு ஒரே கட்டமாக வாக்குப் பதிவு இன்று நடைபெற்றது. மாலை 5 மணி நிலவரப்படி, அசாமில் ----------- சதவிகிதமும், கேரளத்தில் ---------- சதவிகிதமும், புதுச்சேரியில் ------------ சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளன. புதுச்சேரியில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல், வாக்குப் பதிவு தொடங்கியது முதல் வாக்காளர்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்குகளை பதிவு செய்தனர்.

கேரளத்தில் 140 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற வாக்குப் பதிவு விறுவிறுப்பாகத் தொடங்கியது. இங்கு ஆளும் CPM தலைமையிலான இடது ஜனநாயக முன்னணிக்கும், பிரதான எதிர்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும் இந்தத் தேர்தலில் முக்கிய சக்தியாக களமிறங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேபோல், 126 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட அசாமில், காலை 7 மணி முதல் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். ஆளும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

*புதுமையான வாக்குச் சாவடி (11)*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு, அமைதியான முறையில் நடைபெற்றது. இதன் ஒருபகுதியாக, ராஜ்பவன் தொகுதிக்கு உட்பட்ட வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில், வாக்காளர்களை வரவேற்க ரோபோ

வடிவமைக்கப்பட்டு, இயக்கப்பட்டது. வாக்குச் சாவடிக்கு வந்த வாக்காளர்களுக்கு மலர் கொடுத்து வரவேற்ற ரோபோவைக் கண்டு வாக்காளர்கள் மகிழ்ச்சி அடைந்ததுடன், ஆச்சரியத்துடன் கண்டு ரசித்தனர்.

வாக்காளர்களின் பங்கேற்பை அதிகரிக்கவும், வாக்குப் பதிவு நாளை விழாவாக மாற்றவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக, தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர். இத்தகைய புதுமையான ஏற்பாடுகள் வாக்குச் சாவடிக்கு வரும் வாக்காளர்களை வெகுவாக கவர்ந்தது குறிப்பிடத்தக்கது.

*புதுச்சேரி வாக்குப் பதிவு (16)*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு, இன்று காலை 7 மணிக்குத் தொடங்கிய நிலையில், அனைத்து வாக்குச் சாவடிகளிலும், வாக்காளர்கள் ஆர்வமுடன் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்றினர். அந்த வகையில், புதுச்சேரி சட்டமன்றத்தை அடுத்துள்ள சுகாதாரத்துறை இயக்குநர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டு இருந்த வாக்குச் சாவடியில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தனது குடும்பத்தினருடன் வந்து வாக்களித்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜனநாயகத்தை காக்க அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்றும், வாக்களிப்பது நம் அனைவரின் கடமை என்றும் வலியுறுத்தினார். இதேபோல், திலாசுப்பேட்டையில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியும், மண்ணாடிப்பட்டு தொகுதிக்கு உட்பட்ட திருக்கனூரில் உள்ள அரசு உயர் நிலைப்பள்ளியில் அமைச்சர் திரு. நமச்சிவாயமும், கோரிமேடு அன்னை தெரசா செவிலியர் கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச் சாவடியில், மாவட்ட தேர்தல் அதிகாரியும், ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் ஆகியோர் வாக்களித்தனர்.

***புதுச்சேரி தேர்தல் (12)***

புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக இன்று நடைபெற்ற வாக்குப் பதிவு அமைதியாகவும், சுமூகமாகவும் நிறைவு பெற்றது. இந்த சட்டமன்றத் தேர்தலில், முதன் முறை வாக்காளர்கள் ஆர்வமுடன் தங்களது வாக்குகளை பதிவு செய்தனர். அவ்வாறு தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றிய கூடப்பாக்கத்தைச் சேர்ந்த முதன்முறை வாக்காளர் கூறுகையில்...

(வாய்ஸ்)

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக வாக்களிக்கும் வகையில் பல்வேறு ஏற்பாடுகள் தேர்தல் துறை சார்பில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும், மேற்கொள்ளப்பட்டு இருந்தது. இந்நிலையில், பல்வேறு தேர்தல்களில் தொடர்ந்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றி வரும் கீழூரைச் சேர்ந்த மூதாட்டி கூறுகையில் .....

(வாய்ஸ்)

***மாணவ தன்னார்வலர்கள் (9)***

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் 2026-இல் 100 சதவிகித வாக்குப் பதிவு என்ற இலக்கை நோக்கி, தேர்தல் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையில், புதுச்சேரியில் உள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் வாக்காளர்கள் எவ்வித சிரமமும் இன்றி வாக்காளிக்க பல்வேறு கல்லூரிகளில் இருந்து ஆயிரத்து 736 மாணவ தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர்களின் கைபேசியை பாதுகாக்கவும், வாக்காளர்களுக்கு வழி காட்டவும், மாற்றுத் திறனாளிகளுக்கு உதவும் வகையில் பணியில் ஈடுபட்ட மாணவ தன்னார்வலர் தனது அனுபவங்களை பற்றி கூறுகையில்...

(வாய்ஸ்)

***தனித்துவமான வாக்குச் சாவடி (19)***

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலுக்காக 30 தொகுதிகளிலும் மொத்தம் ஆயிரத்து 99 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தத் தேர்தலில் மொத்தம் 294 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். புதுச்சேரி தேர்தல் துறை சார்பில், பாரம்பரியத்தை போற்றும் விதமாக, 3 தனித்துவமான வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. அதன்படி, புதுச்சேரி வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளி, கீழூரில் உள்ள அரசுப் பள்ளி, காரைக்காலில் உள்ள தந்தை பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகியவை இதில் அடங்கும்.

இந்த தனித்துவமான வாக்குச் சாவடிகள், அந்தந்த பகுதியைச் சேர்ந்த பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில், அலங்கரிக்கப்பட்டு இருந்தன. வ.உ.சி அரசு மேல்நிலைப் பள்ளியில் கோலங்கள் வரைந்தும், கீற்று கூரைகள் வேயப்பட்டும், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தது. இதேபோல், காரைக்காலில் உள்ள தந்தை பெரியார் மேல்நிலை பள்ளியில் உள்ள வாக்குச் சாவடியில், பாரம்பரிய நெல் ரகங்கள், இசைக் கருவிகள், கைவினைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மீனவர்கள் வாழ்வியல் முறை உள்ளிட்டவைகள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தன. பாரம்பரிய சிலைகள், பொம்மைகள் உள்ளிட்டவைகள் வைக்கப்பட்டுள்ள கீழூர் தனித்துவமான வாக்குச் சாவடி குறித்து, வாக்கு சாவடி நிலை அதிகாரி கூறுகையில்…

(வாய்ஸ்)

***ஏனாம் – மாஹே (10)***

புதுச்சேரியின் பிராந்தியமான ஏனாம் மற்றும் மாஹே பகுதிகளிலும், சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது. மாஹேயில் உள்ள 31 வாக்குச் சாவடிகளில், 20 வாக்குச் சாவடிகள் முழுவதுமாக பெண்களால் இயக்கப்பட்டதாகவும், மாலை 5 மணி நிலவரப்படி 72.36 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக எமது மாஹே நிருபர் தெரிவிக்கிறார்.

இதேபோல் ஏனாம் பகுதியில், அமைக்கப்பட்டுள்ள 42 வாக்குச் சாவடிகளில் வாக்குப் பதிவு எவ்வித அசம்பாவிதமும் இன்றி அமைதியாக நடந்ததாகவும், இதுவரை 89.80 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளதாக எமது ஏனாம் நிருபர் தெரிவித்துள்ளார்.

*__VVPAT (9)__*

புதுச்சேரி பிராந்தியமான காரைக்காலில் உள்ள சோத்துக்குளம் அரசு உயர்நிலைப்பள்ளி வாக்குச் சாவடியில், இன்று காலை வாக்குப் பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில், VVPAT இயந்திரத்தில் இருந்து திடீரென புகை வந்ததால், வாக்குச் சாவடி அதிகாரிகளும், வாக்காளர்களும் அதிர்ச்சி அடைந்தனர். தகவலறிந்து விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர். இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த பேட்டரியில் வெப்பம் சூடாகி புகை வந்ததாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து, VVPAT இயந்திரம் புதிதாக பொருத்தப்பட்டு வாக்குப் பதிவு மீண்டும் தொடங்கியது.

*__ஐபிஎல் (5)__*

ஐபிஎல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்றிரவு 7.30 மணிக்கு, கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற உள்ள ஆட்டத்தில், கொல்கத்தா அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது. முன்னதாக, நேற்று டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில், டெல்லி அணியை, குஜராத் அணி ஒரு ரன் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

*__வெளிநாட்டு பிரதிநிதிகள் (11)__*

புதுச்சேரி சட்ட மன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை அமைதியான முறையில் நடைபெற்றது. இந்நிலையில், புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை பார்வையிட, கிர்கிஸ்தான், மால்டோவா, மங்கோலியா, பூட்டான் உட்பட 6 வெளிநாடுகளில் இருந்து 9 பிரதிநிதிகள் புதுச்சேரிக்கு வந்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொரு வாக்குச் சாவடியாக சென்று வாக்குப் பதிவு நடைமுறைகளை நேரில் பார்வையிட்டனர். அந்த வகையில், கீழூர் நினைவு மண்டபம் அருகே உள்ள பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய வாக்குச் சாவடி மையத்தை நேரில் பார்வையிட்டனர். வரலாற்று சிறப்பம்சங்களை நினைவுகூறும் வகையில், அமைக்கப்பட்ட மாதிரி வடிவங்களை கண்டு ரசித்தனர்.